1982 பிப்ரவரி 17] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 50 வரை, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

6. அறிவிப்பு

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று மாலை 4 மணிக்குத் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. கு. பா. பழனிப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1982) மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை

* 1982 பிப்ரவரி 5-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.